2011 செப்டம்பர் 14] [திரு. பி. பழனியப்பன்]

தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்தத் தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களின் நிதி நிலைமையும் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, சென்ற மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் எண்ணிக்கையை உயர்த்துவோம், தரத்தைக் காப்போம் என்றார்கள். எந்த எண்ணிக்கையை உயர்த்தினார்கள், எந்தத் தரத்தைக் காத்தார்கள் என்பது தெரியவில்லை.

பொன்முடி அவர்களுடைய சூதும், வாதும், சுரண்டலும் உயர் கல்வித் துறையைச் சீரழித்துவிட்டன. மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டது. ஆகவேதான், நம்முடைய மாண்புமிகு அம்மாவைப் பொறுத்தவரையில், அவர்களால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் வேண்டுமானால் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும்கூட, அதை ஆளமுடியாமல் இருக்கலாம். ஆனால் நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எத்தனை கல்லூரிகளாக இருந்தாலும், அவற்றை சீர்திருத்தக்கூடிய அரசாக அம்மா அரசு திகழ்ந்துகொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அண்ணா பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய அண்ணா பல்கலைக்கழகங்களை சென்னை பல்கலைக்கழகத்தோடு இணைக்க வேண்டும். உலகத்தில் இன்றைக்கு 8,500 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. சென்னை அண்ணா பல்கலைக்கழகம் அதிலே 200-வது இடத்திற்குள் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே உள்ள அரசுக் கல்லூரிகள் 6-உம், அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் 3-உம், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் 18-உம், சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் 493-உம் சேர்த்து 520 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. இந்தப் பொறியியல் கல்லூரிகளிலெல்லாம் இன்றைக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டு வந்தால் 5.7 இலட்சம் மாணவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இது இணைக்கப்பட்டிருக்கிறபோது ஒரே சீரான பாடத் திட்டம், கற்றல் முறை, தேர்வு முறை, தேர்வு வெளியிடும் முறை, பயிற்சிகள் எல்லாம் வேறுபாடு இல்லாமல் இருக்கும். அதோடு நவீன கற்பித்தல் முறை அதாவது EDUSAT வழியாக சிறந்த முறையில் குறிப்பாக ஒருவர் தலைசிறந்த பேராசிரியர் நம்முடைய பல்கலைக்கழகத்திலே இருக்கிறார் என்று சொன்னால் அந்த கிராமத்திலே இருக்கக்கூடிய

கல்லூரிகளுக்கு இந்த தலைசிறந்த பேராசிரியருடைய கல்வி அறிவு அங்கே Internet மூலமாகக் கேள்வி கேட்டு பதில் சொல்வதன்மூலமாக 520 பொறியியல் கல்லூரிகளிலும் விரிவுபடுத்தப்பட்டால், நிச்சயமாக கிராமத்திலே இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-50

2005 ஆம் ஆண்டு State Level Campus Selection என்று நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே இருந்தது. அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழையெளிய மாணவன்கூட ஒரு உயர்ந்த கல்வியைப் பெறுகிற ஒரு வாய்ப்பு இந்தப் பல்கலைக்கழகங்களை இணைத்தால் ஏற்படும் என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு 2011 ஆம் ஆண்டு ஜூன் 3 ஆம் தேதி மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டதுபோல அதிக எண்ணிக்கையில் பல்கலைக்கழகங்களைத் தொடங்கினால் மட்டும் கல்வியினுடைய தரம் உயர்ந்துவிடாது என்ற நோக்கத்தோடு கல்வி சேவையின் தரம் உயர வழிவகுக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் பிரிந்து சிதறிக் கிடந்த பல்கலைக்கழகங்களையெல்லாம் ஒருங்கிணைத்து, சீரமைத்து ஒரு குடையின்கீழ் பழைய நிலைக்கே கொண்டுவந்து சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய பழைமையும், பெருமையும் பாதுகாக்கும் வகையிலும், மாணவர்களுடைய சமுதாயம் பயன்பெறுகிற வகையிலும் அதன் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் உலகத்தரமிக்க பல்கலைக்கழகமாக மாற்றியமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை வாபஸ் பெற்றுக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2011 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 20 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 20 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.